சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP. NO. **04 / 2016**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.1** வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **19.06.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : கலைமதி | கிராமம் : |
| க/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். புலனாய்வு அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை அசல் - எ.ம.சா.ஆ.1, 1ம் எதிர்மனுதாரரின் காருக்கு வழங்கப்பட்ட பாலிசி நகல் - எ.ம.சா.ஆ-2, முதல் எதிர்மனுதாரர் காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் - எ.ம.சா.ஆ.3, Mahindra Maxico Van -ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் - எ.ம.சா.ஆ-4.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முழுமையான காப்பீடு அமலில் உள்ளது. மேற்கண்ட வாகனத்தை பொறுத்து அடிப்பட்ட மனுதாரர் 3ம் மனுதாரர் ஆவார். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு முழுமையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ள காரணத்தினால் நாங்கள் தான் இழப்பீடு கொடுக்கவேண்டுமென்றால் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம்இல்லாத காரணத்தினால் நாங்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரிதான். இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக தவறான சங்கதிகளை தெரிவித்து வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.